From-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No.56/2016

Deposition of witness for: PW - 7

| | | | |
|---|---|---|---|
| Name | : தனசேகரன் | Father/Husband Name | : சுப்பையா |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 27.12.2024 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the day of 2024.

**(சாட்சி சத்தியப்பிரமானம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது.)**

**முதல் விசாரணை: (அரசுதரப்பில்).**

நான் தற்சமயம் தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர்தாலுகா, மூலக்கரை கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றி வருகிறேன். சாட்சி சின்னையா எனக்கு தெரியும். அவர் எனக்கு கீழ் தலையாரியாக நான் கிராம நிர்வாக அலுவலராக இருந்தபோது என்னுடன் தலையாரியாக கருங்காலக்குடி கிராமத்தில் பணியாற்றினார். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். 09.01.2013ம் தேதி காலை சுமார் 11.00 மணியளவில் கருங்காலகுடி கிராம நிர்வாக அலுவலகத்தில் நானும், தலையாரி சின்னையாவும் இருந்தபோது கொட்டாம்பட்டி காவல் ஆய்வாளர் கொட்டாம்பட்டி குற்ற எண் 4ன்படி எதிரியை கைது செய்து எங்கள் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் பெறுவதற்காக எங்களை அழைத்தார். நானும், தலையாரியும் எதிரி கிருஷ்ணன் வீட்டிற்கு முன்பு சென்றோம். எதிரி அங்கு நின்றுகொண்டிருந்தார். அங்கு வைத்து எங்கள் இருவர் முன்னிலையிலும் காவல் ஆய்வாளர் எதிரி கிருஷ்ணனை கைது செய்து ஒப்புதல் வாக்குமூலம் பெற்றார். **( அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் முதல் கையொப்பம் என்னுடையதுதான். அந்த ஒப்புதல் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் கையொப்பம் அசாஆ4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. ).** அதன்பின்பு எதிரி வைத்திருந்த போலி சீல், ட்ரிப் சீட் ஆகியவற்றை அத்தாட்சியில் எங்கள் முன்னிலையில் காவல் ஆய்வாளர் கைப்பற்றினார். அந்த அத்தாட்சியில் நானும், தலையாரியும் சாட்சியாக கையொப்பம் போட்டோம். அந்த அத்தாட்சியில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். **( அந்த அத்தாட்சியில் உள்ள முதலாவது கையொப்பம் அசாஆ 5ஆக குறியீடு செய்யப்படுகிறது ).** இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி ஆஜர்.**

**எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை:**

எனக்கு மேல் அதிகாரியும், கனிம வளத்துறைக்கு இந்த மாவட்டத்தின் உயர் அதிகாரியும், மாவட்ட ஆட்சி தலைவர்தான் என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்படும் இடம் அய்யாபட்டி கிராம பஞ்சாயத்திற்கு உட்பட்ட ஓட்டகோவில்பட்டி என்றால் சரிதான். அந்த அய்யாபட்டிக்கு ஒரு கிராம நிர்வாக அலுவலகர் உண்டு என்றால் சரிதான். 09.01.2013ம் தேதி கொட்டாம்பட்டி ஆய்வாளர் அவர்கள் எதிரியை கைது செய்து என்னிடம் கூட்டி வந்தார் என்று சொல்வது பொய் என்றால் நான் அவ்வாறு சொல்லவில்லை. நான் ஏற்கனவே கனிம வள கொள்ளை சம்மந்தப்பட்ட வழக்குகளில் பல நீதிமன்றங்களில் பலமுறை சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் மதுரை மாவட்ட கனிம வள நீதிமன்றம், மற்றும் இதே நீதிமன்றம் ஆகியவற்றில் கனிம வளம் வழக்குகளில் நான் பலமுறை சாட்சியம் அளித்துள்ளேன் என்றாலும் தற்போது இந்த வழக்கிற்காக அதை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த எதிரிக்கு 09.01.2013 அன்று எதிரிக்கு கருங்காலக்குடியில் வீடே கிடையாது என்றால் சரியல்ல. அவர் ஓட்டக்கோவில்பட்டியில் குடியிருந்து வருகிறார் என்றால் சரியல்ல. இந்த எதிரி என் முன்பாகவோ, தலையாரி முன்பாகவோ ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றாலும், அத்தாட்சியில் பொருட்கள் எங்கள் முன்னிலையில் கைப்பற்றபடவில்லை என்றால் சரியல்ல. எனது கிராம நிர்வாக அலுவலகத்திற்கு ஓட்டக்கோவில்பட்டியில் உள்ள எதிரியின் வீட்டிற்கும் எத்தனை கி.மீ தூரம் உண்டு என்றால் எனக்கு தெரியாது

2) கொட்டாம்பட்டி காவல் ஆய்வாளர் எங்களை சாட்சியாக அழைப்பதற்காக எங்கள் அலுவலகம் வந்தபோது அன்றையதினம் காலை 11.00 மணி இருக்கும். எதிரியை கைது செய்து ஒப்புதல் வாக்குமூலம் பெறவேண்டுமென்று எங்களை அழைத்தபோது எத்தனை மணி இருக்கும் என்றால் அன்றையதினம் காலை சுமார் 11.00 முதல் 11.10 வரை இருக்கும். கொட்டாம்பட்டி காவல் ஆய்வாளர் எங்களை ஒப்புதல் வாக்குமூலம் சாட்சிகளாக இருக்க வேண்டி எனக்கோ, எனது தலையாரிக்கோ, எழுத்துமூலமான வேண்டுகோள் கொடுக்க வேண்டும் என்றால் சரிதான். எதிரியால் கொடுக்கப்பட்டதாக சொல்லப்பட்ட ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியின் ஒவ்வொரு பக்கத்திலும் கையொப்பம் இட்டுள்ளோம் என்றால் சரிதான். பின்பு சாட்சி தானாக முன்வந்து ஒவ்வொரு பக்கமாக கையெழுத்திட்டேனா என்று ஞாபகம் இல்லை என்று சாட்சியம் அளித்தார்.

3) அய்யாபட்டி கிராம நிர்வாக அலுவலர் மற்றும் தலையாரி ஆகியோர்கள் இந்த வழக்கில் பொய்யாக ஒப்புதல் சாட்சியாக கையொப்பம் இட மாட்டோம் என்று கூறியதால் அவர்கள் உடனடியாக பணியிடமாற்றம் செய்யப்பட்டார்கள் என்றால்

அதைப்பற்றி எனக்கு தெரியாது. கருங்காலக்குடி கிராமத்தில் எத்தனை கல் குவாரிகள் இருந்தன என்று என்னால் கூறமுடியும் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. ஒவ்வொரு 15 நாட்களுக்கும் ஒரு முறை கிராம நிர்வாக அலுவலர், வருவாய் ஆய்வாளர், வட்டாட்சியர், காவல் துணை கண்காணிப்பாளர் ஆகியோர்கள் Taluk Level Task Force உறுப்பினார்கள் என்ற முறையில் அந்த அந்த பகுதியில் உள்ள கல் குவாரிகளை ஆய்வு செய்வது அவசியம் என்றால் எத்தனை நாளுக்கு ஒரு முறை என்பது எனக்கு தெரியாது ஆனால் சோதனை செய்ய வேண்டும் என்பது எனக்கு தெரியும். இந்த வழக்கு சம்பவம் நடைபெற்ற இடம் அய்யாபட்டி கிராம பஞ்சாயத்திற்கு உட்பட்டது என்றும், அந்த கிராம நிர்வாக அலுவலரையும், தலையாரியையும் அழைத்து எதிரியை அவர்கள் முன்னிலையில் கைது செய்து ஒப்புதல் வாக்குமூலம் பெற்றுக்கொள்ள நான் சொன்னேனா என்றால் இல்லை.

4) நானும், தலையாரியும், கையெழுத்திட்ட ஒப்புதல் வாக்குமூலம், அத்தாட்சியிலும் எங்கள் கிராம நிர்வாக அலுவலக முத்திரையை கையெழுத்திற்கு கீழ் போட்டுள்ளோமா என்றால் இல்லை. எனது அலுவலத்திற்கு எந்த திசையில் எவ்வளவு தூரத்தில் காவல் ஆய்வாளர் எதிரியை கைது செய்தார் என்றால் எனது அலுவலகத்திலிருந்து சுமார் 100மீ தூரத்தில் எதிரியின் வீடு உள்ளது. அங்கு வைத்து கைது செய்தார்கள். எனக்கு திரை மறந்துவிட்டது. எதிரியை கைது செய்த எதிரியின் வீட்டின் வாசல் எந்த திசை நோக்கி உள்ளது என்று என்னால் சொல்லமுடியுமா என்றால் எனக்கு ஞாபகம். நான் கருங்காலக்குடி கிராம நிர்வாக அலுவலராக 05.05.2012 முதல் 04.05.2013 வரை பணியாற்றினேன். நான் அவ்வாறு பணியாற்றிய போது தினமும் மதுரையிலிருந்து வந்தேன் என்றால் சரியல்ல. கருங்காலக்குடி போஸ்ட்மேன் வீட்டில் வாடகைக்கு இருந்தேன். அவர் பெயர் எனக்கு ஞாபகம் இல்லை. எதிரி அய்யாபட்டி கிராம ஊராட்சி மன்ற தலைவராக இந்த சம்பவம் முதல் தற்போது வரை உள்ளார் என்றால் எனக்கு தெரியாது. கல் குவாரி ஏலங்களில் சின்டிகேட் அமைத்து வசதி படைத்தவர்கள் மட்டும் குறைந்தபட்ச தொகைக்கு கல் குவாரி ஏலங்களை எடுத்துக்கொண்டு அரசுக்கு பெரும் இழப்பை ஏற்படுத்தி வந்ததை இந்த எதிரி கண்டித்து சரியான விலைக்கு அரசுக்கு ஆதாயம் தேடும் பொருட்டு ஏலம் எடுத்ததால் அவர் மீது கால்புணர்ச்சி கொண்டு மற்ற ஏல தாரர்கள் மற்றும் பஞ்சாயத்துபோர்டு தேர்தலில் உள்ள முன்விரோதத்தை வைத்து கனிம வள துறை ஒத்துழைப்புடன் கொட்டாம்பட்டி காவல் ஆய்வாளரை நிர்பந்தப்படுத்து பொய் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றாலும், அதில் நாங்கள் ஒப்புதல் வாக்குமூல சாட்சிகளாக இருந்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் ரப்பர் ஸ்டாம்ப், அனுப்புகை சீட்டு, ரசீதுகள் ஆகியவற்றை அத்தாட்சியில் எதிரியின்

வீட்டில் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல.

5) அத்தாட்சியில் கைப்பற்றப்பட்ட பொருட்களை எதிரி வீட்டிற்குள் இருந்து எடுத்து வந்து ஆஜர் செய்தார். நானோ, தலையாரியோ, கொட்டாம்பட்டி காவல் ஆய்வாளரோ எதிரியின் வீட்டிற்கு ள் சென்று கைப்பற்றவில்லை என்றால் சரிதான். நான் கொட்டாம்பட்டி காவல் நிலையத்தில் வைத்து நானும், தலையாரியும் ஒன்றும் எழுதாத வெற்று கையெழுத்து செய்துவிட்டு தற்சமயம் எனது உயர் அதிகாரியின் நடவடிக்கைக்கு பயந்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னை இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல.

From-39

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.

C.C.No.56/2016

Deposition of witness for: PW - 8

| | | | |
|---|---|---|---|
| Name | : சின்னையா | Father/Husband Name | : வைத்தி |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 27.12.2024 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the day of 2024.

**(சாட்சி சத்தியப்பிரமானம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது.)**

**முதல் விசாரணை: (அரசுதரப்பில்).**

நான் கருங்காலக்குடியில் குடியிருந்து வருகிறேன். இதற்கு முன்பு கருங்காலக்குடி கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலக உதவியாளராக இருந்து வந்தேன். 2015ம் ஆண்டு நான் ஒய்வு பெற்றேன். அசா7யை தெரியும். அவர் கருங்காலக்குடியில் என்னுடன் கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றி வந்தார். ஆஜர் எதிரியை தெரியும். எதிரி கருங்காலக்குடியில் குடியிருந்து வருவதால் அவரை தெரியும். 09.01.2013ம் தேதி காலை சுமார் 10.00, 11.00 மணியளவில் கருங்காலகுடி கிராம நிர்வாக அலுவலகத்தில் நானும், கிராம அலுவலரும் இருந்தபோது கொட்டாம்பட்டி காவல் ஆய்வாளர் கொட்டாம்பட்டி வழக்கு சம்மந்மதமாக எதிரியை கைது செய்து எங்கள் முன்னிலையில் விசாரிக்க வேண்டுமென்று அழைத்தார். நானும், கிராம நிர்வாக அலுவலரும் எதிரி கிருஷ்ணன் வீட்டிற்கு முன்பு சென்றோம். எதிரி அங்கு நின்றுகொண்டிருந்தார். அங்கு வைத்து எங்கள் இருவர் முன்னிலையிலும் காவல் ஆய்வாளர் எதிரி கிருஷ்ணனை விசாரித்து என்னிடமும், கிராமநிர்வாக அலுவலரிடமும் கையெழுத்து வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்கு மூலத்தில் இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். **( அந்த ஒப்புதல் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையொப்பம் அசாஆ6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. ).** அதன்பின்பு எதிரி அவர் வீட்டின் முன்பு வைத்திருந்த பைல், சீல் கட்டை, ஆகியவற்றை அத்தாட்சியில் எங்கள் முன்னிலையில் காவல் ஆய்வாளர் கைப்பற்றினார். அந்த அத்தாட்சியில் நானும், கிராம நிர்வாக அலுவலரும் சாட்சியாக கையொப்பம் போட்டோம். அந்த அத்தாட்சியில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். **( அந்த அத்தாட்சியில் உள்ள இரண்டு கையொப்பம் அசாஆ 7ஆக குறியீடு செய்யப்படுகிறது ).** இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி ஆஜர்.**

**எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை:**

ஒப்புதல் வாக்குமூலம், அத்தாட்சி, வரைபடம், பார்வை மகஜர், ஆகியவற்றை யார் எழுதினார்கள் என்றால் போலிஸ் ஏட்டையா எழுதினார்கள். நான் எதிரியின் வீட்டிற்கு சென்றபோது கிராம நிர்வாக அலுவலர் அலுவலக சீலை எடுத்துச் சென்று ஒப்புதல் வாக்குமூலத்திலும், அத்தாட்சியிலும் கையொப்பம் இட்டு சீல் வைக்கப்பட்டதா என்றால் இல்லை. ஒப்புதல் வாக்குமூலம், அத்தாட்சி, தயார் செய்தபின்பு மறுநாள் போலீசார் எங்களை காவல் நிலையத்திற்கு வர சொன்னார்களா என்றால் இல்லை.

ஒன்றும் எழுதாத வெற்று காகிதத்தில் கொட்டாம்பட்டி காவல் நிலையத்தில் வைத்து

என்னிடமும், அசா7விடமும் காவல் ஆய்வாளர் கையெழுத்து வாங்கினார் என்றால் சரியல்ல. எதிரியின் வீட்டிற்கு அருகே சுமார் 300 வீடு உள்ளது என்றால் சரியல்ல 4, 5 வீடுகள் உள்ளது. அத்தாட்சி மற்றும் ஒப்புதல் வாக்குமூலம் தயார் செய்யப்பட்ட போது அக்கம்பக்கத்தினர் அங்கு வந்தார்கள் என்றால் இல்லை. போலீசாரா என்னையும், அசா7யும் விசாரித்து கையொப்பம் பெற்றார்கள் என்றால் சரிதான். நான் சொன்னதுபோல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், எனது உயர் அதிகாரிகள் சொன்னதன்பேரிலும், போலீசார்கள் கேட்டுக்கொண்டதன்பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரியிடம் விசாரித்து வாக்குமூலம் பெற்றபின்பு எங்களிடம் வாக்குமூலம் பெற்றுக்கொண்டார்கள். எதிரி வாக்குமூலம் கொடுத்ததில் எங்களிடம் கையெழுத்து வாங்கினார்கள். நான் சொல்வதுபோல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.